005

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (இயற்கை விஞ்ஞானம்) - 2022/2023

மட்டம் - 05

இறுதிப்பரீட்சை – 2022/2023

**STU5511– உளவியல் கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 20.11.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் விடையளிக்குக. பகுதி II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

## பகுதி – I

1. 'ஓர் ஆசிரியருக்கு பாட அறிவு மட்டுமன்றி மாணவரின் இயல்பு பற்றிய அறிவும் அவசியம்' இக்கூற்றை உளவியல் கல்வி அடிப்படையில் சுருக்கமாக விளக்குக.
2. வினாக்கொத்து எனும் பிள்ளையின் தகவல் சேகரிக்கும் முறையில் காணப்படும் மூன்று (03) பலங்கள் மூன்று (03) பலவீனங்களையும் கூறுக.
3. பிள்ளையின் முழுமையான அபிவிருத்தியை உருவாக்குவதில் ஆசிரியர் என்ற வகையில் உங்களின் பங்களிப்பைச் சுருக்கமாக விளக்குக.
4. 'பிள்ளையின் முழுமையான அபிவிருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு அதிகம்' இந்த கூற்று சரியா? தவறா? எனக் குறிப்பிட்டு இரண்டு (02) பொருத்தமான உதாரணங்களைத் தருக.
5. தன் மைய சிந்தனை (Ego centric) சிந்தனை என்பது யாது? எனச் சுருக்கமாக விளக்குக. இதன் மூன்று (03) பண்புகளை தருக.
6. சுமைகட்டு (Scaffolding) எனும் பொறிமுறை, கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் சவால்களை முகம் கொடுக்க எப்படி துணை புரிகின்றது என்பதை உதாரணம் ஒன்றின் (01) மூலம் குறிப்பிடுக.
7. பிள்ளை வளர்ச்சி மற்றும் விருத்தியில் பரம்பரை எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதை இரண்டு (02) காரணிகளின் துணையுடன் விளக்குக.
8. தர்க்கரீதியான சிந்தனை என்பது அறிவாற்றல் திறன்களின் மிக விருத்தியடைந்த ஒரு திறனாகும். இதனை வகுப்பறையில் விருத்தி செய்யக்கூடிய இரு (02) செயற்பாடுகளை விஞ்ஞான / கணித ஆசிரியர் எனும் வகையில் முன்வைக்குக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** ஆசிரியர் எனும் வகையில் முதிர்ச்சி மற்றும் கற்றல் தொடர்பான எண்ணக்கரு விளக்கம் பெறுவது ஏன் அவசியமாகின்றது? **(06 புள்ளிகள்)**

**ii.** முதிர்ச்சி மற்றும் கற்றல் எவ்வாறு ஒப்பீட்டளவில் மாணவரின் வளர்ச்சி மற்றும் விருத்தியில் தாக்கம் செலுத்துகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

iii. "ஒரு மாணவன் கற்றலுக்கு ஆயத்தமாக இல்லை" என கருதுக. அம்மாணவனை ஆயத்தப்படுத்தும் இரண்டு (02) உத்திகளைச் சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

10.

i. பியாஜேட் மற்றும் விகொட்ஸ்கி என்பவர்களின் அறிவாற்றல் சார் கோட்பாடுகளின், அடிப்படை தொள்கைகளுக்கு இடையிலான வேறுபாட்டை தருக. **(06 புள்ளிகள்)**

ii. "பியாஜேயை பொருத்தவரையில் தனிநபரின் மன செயற்பாடுகள் யாவும் பிரதிபலிப்பு நடவடிக்கைகளாகும்" மன செயற்பாட்டில் "ஒருங்கிணைப்பு" மற்றும் "தழுவல்" எனும் பதங்களை பொருத்தமான உதாரணம் மூலம் விளக்குக. **(06 புள்ளிகள்)**

iii. நீங்கள் ஒரு பாடத்தை கனிஷ்ட இடைநிலை மாணவர்களுக்கு திட்டமிடப்போவதாக கற்பனை செய்து கொள்க. எந்த மூன்று (03) கற்பித்தல் முறைகளை நீங்கள் மாணவரின் அறிவு விருத்திக்காக உள்வாங்குவீர்கள் என்பதையும் அவற்றை தெரிவு செய்தமைக்கான காரணங்களையும் தருக.

**(08 புள்ளிகள்)**

11.

i. ஆளுமை எனும் பதத்தை ஏதேனும் ஒரு ஆளுமைசார் கோட்பாட்டின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்துக. **(08 புள்ளிகள்)**

ii. மாணவரின் சமனிலை ஆளுமை விருத்தியில் உங்களுடைய வகிபாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை குறைந்தது மூன்று (03) உதாரணங்களுடாக விளக்குக. **(12 புள்ளிகள்)**

12.

i. அடிப்படையான மனவெழுச்சிகள் நான்கை (04) குறிப்பிடுக. அவை எவ்வாறு இரண்டாம் நிலை மனவெழுச்சிகளை பாதிக்கும் என்பதை விளக்குக. **(05 புள்ளிகள்)**

ii. "கட்டிளமை பருவமானது அதிக பிரச்சினைகள் மற்றும் கஷ்டங்கள் உள்ளடக்கிய பருவமாக அடையாளம் காணப்பட்டு உள்ளது." கட்டிளமைப் பருவத்தில் மனவெழுச்சி விருத்திக்கான முக்கியத்துவத்தை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக. **(06 புள்ளிகள்)**

iii. கட்டிளமை பருவ மாணவரின் மனவெழுச்சி விருத்தியில் விஞ்ஞான / கணித ஆசிரியர் எனும் வகையில் எவ்வாறு செயற்படுவீர்கள் என்பதை மூன்று (03) உதாரணங்களுடன் விளக்குக. **(09 புள்ளிகள்)**

13.

i. கல்விக்கான நடத்தைவாத கோட்பாடு மற்றும் கல்விக்கான அறிவாற்றல் கோட்பாடுகள் இடையிலான வேறுபாடுகள் இரண்டை (02) குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

ii. பண்டுராவின் சமூக கற்றல் கோட்பாடு என்பது நடத்தை வாத கோட்பாடுகள் மற்றும் அறிவாற்றல் கோட்பாடுகளின் இடையில் அமைந்து உள்ளதாக கருதப்படுகின்றது. பண்டுராவின் சமூக கற்றல் கோட்பாட்டின் அடிப்படை கொள்கைகளை விளக்குக. **(06 புள்ளிகள்)**

iii. விஞ்ஞான / கணித ஆசிரியர் என்ற முறையில் மேலே கூறப்பட்ட கொள்கைகள் எப்படி மாணவரின் கற்றலை விருத்தி செய்ய உதவும் என்பதை மூன்று (03) உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -